# பாலம் தகர்ப்பு; ரயில் பாதைக்கு தீவைப்பு!


விலை ரூபா 1–25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 மார்கழி 25 ரபி - ஆகி 17 இதழ் 326
யாழ்ப்பாணம் புதன்கிழமை 9-1 85


## ராமேஸ்வரத்தில் சம்பவம்!!

### இந்திய மீனவரை இலங்கை கடற்படை சுட்டதன் எதிரொலி

(சென்னை)

இரு இந்திய மீனவர்கள் தனுஷ்கோடிக்கு அருகே இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து ராமேஸ்வரத்தில் பெரும் அதிர்ச்சியும் பதற்றமும் நிலவுகின்றது ஆத்திரம் கொண்ட மக்கள் 20 அடி பாலம் ஒன்றை தகர்த்துள்ளனர். ரயில் பாதைக்கும் தீவைக்க முயற்சி நடைபெற்றுள்ளது.

இந்திய அரசு இதுவிடயத்தில் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரி மீனவர்கள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கியுள்ளனர்

இன்று திராவிடக் கழகச் செயலாளர் வீரமணியும், மதுரை ஆதீனகர்த்தரும் ராமேஸ்வரத்துக்கிச் செல்லவிருக்கிறார்கள்.

இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டது குறித்து இந்திய அரசு இலங்கை அரசிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இரு இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று கூறப்பட்டது.

வங்கக் கடலில் தனுஷ்கோடிக்குத் அருகே இச்சம்பவம் இடம்பெற்றதாக யூ. என் ஐ. செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது

(4ம் பக்க 3ம் கலம் பார்க்க)

# யாழ். நகரை நேற்று கலக்கிய
# இரு குண்டு வெடிப்புகள்!

## பாதையில் பாரிய குழி; மாடிவீடு தரைமட்டம்

(யாழ்ப்பாணம்)

**நேற்றுக் காலை யாழ். நகரில் ஆரியகுளத்துக்கு அருகில் ஒரு குண்டு வெடிப்பு இடம்பெற்றதையடுத்து அங்குள்ள வீடொன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது இச்சம்பவங்களால் நகரம் பெரும் பதற்றத்துக்குள்ளானது. மக்கள் உயிருக்கு அஞ்சி அப்பகுதியிலிருந்து வெளியேறினார்கள். சிறிது நேரத்தில் யாழ். நகர் வெறிச்சோடிவிட்டது.**

யாழ்ப்பாணம் ஆரிய குளத்திற்கு அருகில் உள்ள பருத்தித்துறைவீதி நேற்றுக் காலை குண்டு வைத்து தகர்க்கப்பட்டதால், அங்கு சுமார் இருபது அடி ஆழமான குழி ஏற்பட்டுள்ளது. சுமாா ஒரு மணி நேரத்தின்பின் ஆரிய குளத்திற்கு சமீபத்திலுள்ள சிறும்பியடி ஒழுங்கையில் உள்ள மாடிவீடொன்று குண்டுவைத்துத்தகர்க்கப்பட்டதனல் தரைமட்டமானது.

சுமார் 40 அடி அகலமான பருத்தித்துறை வீதி சுமார் 20 அடி நீளத்துக்கு வெடித்து சிதறி, சுமார் இருபதடி ஆழமான குழி ஏற்பட்டதால்

(4-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## இந்தியாவிடம் அமிர் கோரிக்கை: அப்பாவிகள் கொலையாவதை தடுத்து நிறுத்துங்கள்!

[சென்னை]

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அப்பாவித் தமிழ்மக்கள் படுகொலை செய்யப்படுவதை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் இந்திய அரசை வற்புறுத்தியுள்ளார்.

தமிழ்ப் பிரதேசங்களில் அப்பாவித் தமிழர்கள் காட்டுமிராண்டித்தனமாக சுட்டுக் கொல்லப்படுகிறார்கள் என்று அவர் நிருபர்களிடம் கூறினார்.

சிங்கள ராணுவமும், மக்களும் பயங்கரவாதிகளை ஒழித்துக் கட்டுகிறோம் என்ற போர்வையில் தமிழ் மக்களைக் கொலைசெய்கிறார்கள் என்று அவர் கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக இந்திய பிரதம மந்திரி திரு. ரஜீவ் காந்தியுடன் பேசப் போவதாகவும் அவர் சொன்னார்.

மன்னார் குருவானவர் ஒருவர் கொலைசெய்யப்பட்டது குறித்தும் அமிர்தலிங்கம் கவலை தெரிவித்தார்.

## நால்வருக்கு மரணதண்டனை!

(யாழ்ப்பாணம்)

நேற்றுமாலை யாழ்நகரில் காணப்பட்ட சுவரொட்டியில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:-

''கரம்பனைச் சேர்ந்த சூசைப்பிள்ளை செல்லம்மா, நோபிள் சூசைப்பிள்ளை என்ற பெண்களை கொடூரமாகக் கொலைசெய்து கொள்ளையடித்த மக்கள் விரோதிகள்

[4-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## யுத்தமும் பேச்சுவார்த்தையும் ஒரேசமயத்தில் சாத்தியமில்லை

### பாராளுமன்றத்தில் சிறில் மத்தியூ

(கொழும்பு)

''தமிழர்கள் இந்த நாட்டில் சமாதானமாக வாழ விரும்பினால் 74வீதத்தினர் இங்குசிங்களவர் என்பதையும், அவர்களே இந்த நாட்டில் ஆதிக்குடிகள் என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்று முன்னாள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ நேற்று பாராளுமன்றத்தில் தமது பதவி விலகல்பற்றிய விளக்கவுரை நிகழ்த்துகையில் கூறினார்.

''தமிழர்கள் இந்த நாட்டில் 12 6 வீதமே இருக்கிறார்கள் ஆனால் நாட்டின் மூன்றில் ஒரு பகுதியை நிர்வகிக்கக் கேட்கிறார்கள்'' என்று திரு. சிறில் மத்தியூ கூறினார்.

பாராளுமன்ற சம்பிரதாயங்களையோ, அமைச்சரவை மரபுகளையோ தாம் மீறவில்லையெனவும் அவர் கூறினார்.

சிங்கள மக்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது அவர்களின் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்க முடியாது. கிறிஸ்துவுக்கு முன்பிருந்தே தென் இந்திய படையெடுப்புக்களை நாம் முறியடித்து வந்துள்ளோம்.

மலை நாட்டில் தமிழர்கள் மலைநாடு கேட்கிறார்கள். வடக்

(4ம் பக்கம் 3ம்கலம் பார்க்க)

## ராணுவம் சுட்டதில் இளைஞர் பலி!

(மாவிட்டபுரம்)

குப்பிழானில் நேற்றுமுன்தினம் இராணுவத்தினர் வீடொன்றைச் சோதனையிட்டபோது, அங்கிருந்த இளைஞரொருவர் தப்பியோடினார். அப்போது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது, அந்த இளைஞர் பலியானார்.

இவருடைய சடலத்தை தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் ராணுவத்தினர் கையளித்தனர். இந்த சடலத்தை வைத்தியசாலையிலிருந்து இனந்தெரியாத நபர்கள் நேற்றிரவு கடத்திச்சென்றதாக கூறப்பட்டது.

## வழக்கம்பரை வியாபார நிலையத்தில் அடைவு நகைகள் கொள்ளை!

(சுழிபுரம்)

தொல்புரம் வழக்கம்பரையிலுள்ள பிரபல வியாபார நிறுவனமான இ. துரையப்பா அன் சன்சில் நேற்று முன்தினம் இரவு ஏழரை மணியளவில் முகமூடிகள் அணிந்த ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கோஷ்டி கதவை உடைத்து அடைவு நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளது. மூன்று வாகனங்களில் வந்த கொள்ளையர்கள் சுவர்ஏறி குதித்து கடை சொந்தக்காரர்களையும் காவலாளர்களையும் பணயம் வைத்துவிட்டு கொள்ளையை நடத்தினார்கள். வீட்டிலிருந்த பெண்கள், குழந்தைகளின் நகைகளையும் கழற்றி வாங்கிச் சென்றுள்ளதுடன் வீட்டிலிருந்த வேறு பெறுமதிமிக்க பொருட்களையும் களவாடிச் சென்றுள்ளனர்.

## வண்ணை தபாலகத்தில்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை தபால் நிலையத்தில் நேற்றுக்காலை துப்பாக்கி முனையில், இரும்புப் பெட்டியிலிருந்து பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை சுமார் 10மணியளவில் கார் ஒன்றில்வந்த சுமார் எட்டு இளைஞர்கள்,

[4-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## சுண்டுக்குளி தபாலகத்தில்

(கொழும்புத்துறை)

சுண்டுக்குளி தபாலகம் செவ்வாய்க்கிழமை மாலை மீண்டும் மூன்றாவது தடவையாகக் கொள்ளையடிக்கப்பட்டது. மாலை மூன்று மணியளவில் திடீரென்று வெளியே மூடப்பட்டிருந்த தபாலகத்தினுள் நுழைந்த இனந்தெரியாத வாலிபர்கள் துப்பாக்கிமுனையில் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றனராம்.

[4ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## யாழ். வ. போ. ச. காரியாலயத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு முன்னால் உள்ள வ. போ. ச. காரியாலயத்தில் நேற்று நண்பகல் துப்பாக்கி முனையில் 5235 ரூபா கொள்ளையடிக்கப்பட்டது, ஐந்து இளைஞர்கள் இக்கொள்ளையை நடத்தியதாக கூறப்படுகிறது.

இப்பணம், பஸ்களில் வசூலிக்கப்பட்ட பணமென்றும், இதிலிருந்து ஊழியருக்கு சம்பளப்பணமாக கொடுக்கப்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பத்தடி அகலம் பன்னிரண்டடி நீளமான, பாவிக்காத உயர்ந்த ரக பெல்சியம் கம்பளம் ஒன்று விற்பனைக்குண்டு-தொடர்பு திருமதி விஜயராணி பத்மராசா, 11/1 முதல் ஒழுங்கை, ஈச்ச மோட்டை, யாழ்ப்பாணம். 1286

திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் பலாலி வீதியில் உள்ள காணியின் பின்பக்கமாக பன்னிரண்டடிப் பாதையுடன் இரண்டு பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. பொ. சிவசுப்பிரமணியம், உரிமையாளர், பணிக்கர் வளவு. திருநெல்வேலி. 1278

## தேவை

பிரான்ஸ் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற மாதவருமானம் பத்தாயிரத்திற்கு மேலுள்ள 23 வயதுடைய உயர் வேளாள குலத்தையுடைய மகனுக்கு பெற்றோர் அழகான தகுதியுடைய மணமகளைத்தேடுகின்றனர். நியாயமான சீதனம் எதிர்பார்க்கப்படும். சாதகக் குறிப்பு, படம் என்பவற்றுடன் விண்ணப்பிக்கவும், விளம்பர இல: 15 0 C/o ஈழநாடு. 1280

## தேவை

கடந்த பல வருடங்களாக கிளிநொச்சியில் இயங்கிவரும் தனியார் வைத்திய நிறுவனத்திற்கு M. B. B. S. தராதரமுடையவரும், பிரசவ அனுபவமுடைய பெண் வைத்தியர் உடன் தேவை நேரிலோ கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும். டாக்டர் திருமதி சிறீதரன், குமரன் கிளினிக், பரந்தன். 1283

## தவறிவிட்டது

செ. இராசமணியின் 17661029 U இலக்க அடையாள அட்டையும், அடைவு துண்டும் மணிப்பேசுடன் காங்கேசன்துறை சந்தைக்குப் போகும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தயாளன், தேனீர்க்கடை, காங்கேசன்துறை என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். 1285

சின்னையா செல்வரட்ணம், கரணவாய வடக்கு கரவெட்டி என்ற விசாசமிடப்பட்ட தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேல் குறிப்பிட்ட விலாசத்தில் கையளிக்கவும். 1273

## தவறிவிட்டது

கே. காசிப்பிள்ளை வில்வவாசம் பன்னாலை, தெல்லிப்பழை என்ற விலாசமிடப்பட்ட தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து குறிப்பிட்ட விலாசத்தில் கையளிக்கவும். 1279

## காணவில்லை

480331192 V இலக்க எனது அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து ஒப்படைக்கவும். — சிவலிங்கம் இந்திரலிங்கம், 'விமலஸ்தான்', 18, மயிலணி வீதி, சுன்னாகம். 1287

## வாடகை

ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில் நாவலர் ஒழுங்கையில் சுற்றுமதிலுடன் நல்ல சூழலில் பெரிய வீடு வாடகைக்கு உண்டு. அட்வான்ஸ் 20,000/- மாத வாடகை 750/- வாடகைப்பணம் அட்வான்சில் மாதம் தோறும் கழிப்பதற்கும் சம்மதம். நேரில் தொடர்பு கொள்ளவும் 273/1 நாவலர் லேன், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 1276

## யாழ்ப்பாணம் அபிவிருத்தி சபை வரவு செலவுத் திட்டம் - 1985

1980-ம் ஆண்டு 35-ம் இலக்க அபிவிருத்திச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40 (பி) பிரிவிற்கமைய யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் மேற்படி வரவு செலவுத் திட்டம் இன்று தொடக்கம் ஏழு நாட்களுக்குப் பொதுமக்களின் பார்வைக்காக அபிவிருத்திச் சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

மு பஞ்சலிங்கம்,
செயலாளர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை,
யாழ்ப்பாணம்.
07-01-1985

1274

## யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர் தர மீட்டல் வகுப்புகள் ஆகஸ்ட் 1985.
2-1-85-ல் ஆரம்பமாகியுள்ளது.
2-ம் தவணை ஆரம்பம் 16 - 1 - 85.
G. S. Q. வகுப்புகள் ஆரம்பம்: 16 - 1 - 85
அதிபர்.
தொலைபேசி எண்; 22617
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 1208

## மறுப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் இடம் பெறும் வன்முறைகள் எவற்றுக்கும் நாம் பொறுப்பில்லை என்று ஈழப்புரட்சி கம்யூனிஸ்ட் கட்சி என்ற இயக்கம் மறுப்பு தெரிவித்துள்ளது

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கெடுப்பதே தமது நோக்கமென்றும் இந்தஇயக்கம் தெரிவித்துள்ளது.

(கி)

## பதவியேற்பு

[சென்னை]

நியூயோர்க் புறூக்ளின் மருத்துவ மனையில் சிகிச்சைபெற்று வரும் திரு. எம். ஜி ராமச்சந்திரன் சென்னை திரும்பியதுமே தமிழகத்தின் புதிய அமைச்சரவை பதவியேற்கும் என்று தமிழகமாநில செய்தித்துறை அமைச்சர் திரு ஆர் எம்.வீரப்பன் சென்னையில் தெரிவித்தார்.

திரு. எம். ஜி ஆர். அவர்களின் உடல்நிலை விரைவாகத் தேறி வருவதாகவும், அடுத்த வாரமளவில் அவர் தாயகம் திரும்புவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகவும் அவர் மேலும் கூறினர். (கி)

## 31-வது நாள் நினைவஞ்சலி

திருமதி சிவகாமிப்பிள்ளை நடராஜா



உதிர்வு:
9-12-1984

தெய்வத்துடன் சங்கமமாகிவிட்ட எங்கள் தாயே! உங்கள் பிரிவால் எமது உள்ளம் குமுறுவதை எங்ஙனம் ஆற்றுவோம். உங்கள் நினைவு என்றும் எம்மை விட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

161, காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். 1282

## 31-ம் நாள் நினைவஞ்சலி

சபாபதிப்பிள்ளை ஆறுமுகம்
(மலேசியன் பென்சனியர்)

மலர்வு: 18-7-1901 உதிர்வு: 10-12-1984



இல்லத்தின் உயிர் நாடியாய் இருந்து வாழ்வின் உன்னத நிலையில் எங்களை உருவாக்கிய அன்புத் தெய்வமே. தாங்கள் மலேசியாவில் 37 வருடம் சேவை செய்து இளைப்பாறிய பின் தாய் நாட்டில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து இறையடி சேர்ந்துள்ளீர்கள் உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புது றோட்டு;
காரைநகர்,
9 - 1 - 85. 1261

## வடஇலங்கைச் சங்கீதசபைப் பரீட்சைகள் 1985
### கல்வித்திணைக்களம் யாழ்ப்பாணம்
## அறிவித்தல்

மேற்படி பரீட்சைகளுக்குரிய விண்ணப்பங்கள் அனுப்பும் முடிவு திகதி 18-1-1985 ஆகவும், பிந்திய விண்ணப்பங்களுக்குரிய முடிவு திகதி 25-1-85 ஆகவும் பின்போடப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

ம. சிமியாம்பிள்ளை
கல்விப்பணிப்பாளரும்
வ இ. ச. சபைத்தலைவரும்

இல. 5/A, வ. இ ச.சபை அலுவலகம்
கல்வித்திணைக்களம்
யாழ்ப்பாணம். 4-1-85. 1275

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)

## ஏல விற்பனை
### (அலுமினியப் பாத்திரங்கள்)

இடம்: யாழ். ப. நோ. கூ. சங்கம்
சாய்ப்புக் களஞ்சியம்
ஆஸ்பத்திரி வீதி, (கொட்டடிச் சந்திக்கு அருகாமை)
காலம்; 11 - 01 - 1985
நேரம்: காலை 10 - 00 மணி
பொருட்கள்: புதிய பானை வகைகள், இதர அலுமினியப் பாத்திரங்கள்
மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யப்படும்.

பதில் பொதுமுகாமையாளர்.
127. கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
08 - 01 - 85. 1288


## Home Finance Ltd.

உங்கள் நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் பாத்திரமான
ஹோம் பினான்ஸ் லிமட்டெட் ஸ்தாபனத்தார்
தமது புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கும் இவ்வேளையில்
தமது புதிய சேவைகளையும்
அறிவிக்கின்றனர்.
நாஷனல் இன்சூரன்ஸ் கோப்பரேசன் அமைவுக்கு நாம் ஏஜென்டுகளாக நியமிக்கப்பட்டுள்ளோம்,
சகலவித காப்புறுதி வேலைகளும் செய்துகொடுப்போம்.
உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
இதைவிட நாம் அலுமினிய பாத்திரங்கள்,
FIBRE GLASS வீட்டுத்தளபாடங்கள்
முதலியவற்றை விற்கிறோம்.

TRADE CENTRE,
HOME FINANCE LTD.
NO. 155, MANIPAY ROAD, JAFFNA.


## சபிண்டீகரணக் கிரியைகளும் நினைவு அஞ்சலியும்

திருமதி இராசலட்சுமி அப்புத்துரை



தோற்றம்:
24-5-1920

மறைவு:
10-12-1984

உரும்பராய் சைவ த. வித்தியாசாலை ஆசிரியையாக 34 வருடம் பணிபுரிந்து இளைப்பாறியவரும், இளைப்பாறிய ஆசிரியர் சி. அப்புத்துரை அவர்களின் அன்பு மனைவியும், அமெரிக்காவில் பணிபுரியும் Dr. ச செல்வநாயகம் M. D. அவர்களின மனைவி, திருமதி ஞானசோதி B.D.S. அவர்களினதும் யாழ் - வயாவிளான் ம. ம. வித்தியாலய ஆசிரியரும் இந்திராணியின் கணவருமாகிய சுகுணனந்தன் அவர்களினதும் கொழும்பு நீர்வளசபையில் பணிபுரிந்து விலகி கனடாவில் வசிப்பவரும் பாலினி B Sc. யின் கணவருமாகிய சச்சிதானந்தன் B. Sc பொறியியலாளர் அவர்களினதும் கனடாவில் பொறியியலாளராகக் கடமைபுரியும் செல்வக்குமார் அவர்களின் பத்மினி பத்மசோதி அவர்களினதும் அன்புத்தாயாருமாகிய, காலஞ்சென்ற திருமதி இராசலட்சுமி அப்புத்துரை அவர்களின் 31-ம் நாள் சபிண்டீகரணக் கிரியைகளும் நினைவு அஞ்சலியும் இன்று (9-1-1985) புதன்கிழமை பகல் 11 மணிக்கு ''ஆனந்தபவனம்,'' உரும்பராயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

சுபம்

கணவன் சி. அப்புத்துரை, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்
'ஆனந்தபவனம்,' உரும்பராய். (1212)

# சைக்கிள் விண்ணப்ப மாதிரிப்படிவம்

30-11-84ன் 325/23ம் இலக்கமும், 4.12-84ன்—326/7 இலக்கமும் கொண்டு, அதி விசேட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, பொதுமக்கள் பாதுகாபபுக் கட்டளைச் சட்டம் 5-ம் பிரிவின்—7(1), 8(1), 8(2) இல. ஒழுங்குவிதி கட்கமைய ஓர்

**வாகன உடைமைக்கும், பாவனைக்குமான அதிகாரம் வழங்கல் பத்திர விண்ணப்பம்**

தொடர் இல.
Serial No.

D/

| விபரம் | உரிமையாளர் | உரிமையாளர் அல்லாவிடின் பாவனையாளர் |
|---|---|---|
| 1. முழுப் பெயர் | | |
| 2. முகவரி | | |
| 3. தொழில் | | |
| 4. தேசிய அடையாள அட்டை இல: | | |

வாகன விபரம் (Particulars of Vehicle)

5. வாகன இல.

6. இறைவரி அனுமதிப்பத்திர இல. 1984, 85 :

7. இறைவரி அனுமதிப்பத்திர அகிகாரி

8 ஒழுங்கு விதி 8, 2வது அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள வீதிகளில், ஒழுங்குவிதி 8(2)ற்கமைய, உ'ாது பாவனைக்கு அவசியமான வீதிகளைக் குறிப்பிடுக.

9 நான் மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இதனால் உறுதிப்படுத்துகிறேன். ஒழுங்கு விதி 7(1)ன் கீழ் வாகன உடைமைக்கும் கீழ்க்காணும் ஒழுங்கு விதியின் கீழ் வர்கன பாவனைக்கும் அதிகார அளிப்பை வேண்டுகிறேன்.

ஒழுங்கு விதி 8 (1)
ஒழுங்கு விதி 8 (2)

உரிமையாளர்/பாவனையாளர்/கையொப்பம். திகதி:

(படிவத்தின் அளவு- ஏழரை அங்குலம் அகலமாகவும் பன்னிரண்டு அங்குலம் நீளமாகவும் (உயரமாகவும்) இதன் இடப்புறத்தில் இரண்டு அங்குல அகலமான இடைவெளி விடப்பட்டத'கவும் இருக்க வேண்டும்,)

# வியாழ மாற்றம்

(நேற்றைய தொடர்ச்சி)

கன்னி:- சரீரசுகம் செய்காரியங்களில் வெற்றி பிறர் பொருள் வரவு பெரியோரிடம் மதிப்பு ஆகியவை உண்டு இயந்திர இயக்குனர்களுக்கு சமசுகமும் அரசியல் வாதிகளுக்கு மதிப்பும் கிடைக்கும். காதலர் வாழ்வில் கனிவான நிகழ்ச்சியும், குடும்பஸ்தர்களுக்கு புத்திர சுகமும் உண்டாம்.

துலாம்:- தொழில் நலம், தொல்லைகள் நிவர்த்தி, குடும்ப சுகம், குறிக்கோள் வெற்றி, வீடுவாசல் சிறப்பு, நீண்டநாள் திருமணமாகாதவர்களுக்கு திருமண சம்பந்தம் ஏற்படும். பிரிந்த காதலர்கள் மீண்டும் ஒன்று சேர்வர். கலைஞர்களுக்கு மதிப்புண்டு கைத்தொழில் கடற்தொழில் புரிவோர் கனிசமான வெற்றி அடைவர். கல்விக்கு இது சிறப்பான காலம்.

விருச்சிகம்:- சாதாரண பலன் பொறுமை உணர்ச்சி வேண்டும். நண்பர் மூலம் நம்பிக்கை மோசடி நேரும். விவசாயிகள் பருவ காலத்தை தவறவிடாது நிதானத்துடன் தொழில் புரிந்தால் நலன் பெறுவர் பூமிப்பிணக்குகள் தலை தூக்கலாம் பொறுமை வேண்டும். கன்னிப்பெண்கள் கண்காணிப்புடன் நடந்து கொள்ளவேண்டும்.

தனுசு-; வாகனசுகம். வ' வில் திருப்தி. எதிர்பாராத நன்மைகளுக்கும் இடமுண்டாம். இக்காலம் அரச ஊழியர்களுக்கு உகந்த காலமாகும் குடும்ப வாழ்வில் இனிமையும் சந்தோசமும் ஏற்படும். எனினும் கறுப்பாள் வசம் பொருள் கொடுக்கல் வாங்கலைத் தவிர்க்கவும். விவசாயிகளாயின் பிறர் நம்பிக்கை கூடாது

மகரம்:- குடும்ப வழிக்கவலை பூமியில் நஷ்டம். விவசாயிகளுக்கு லாபக்குறைவு இல்லறவாழ்வில் எதிர்பாராத சோகம். காதலர் வாழ்வில் கலங்கம் ஏற்பட இடமுண்டு. வணிகர்கள் அதிக முதலீட்டைத்தவிர்க்கவும். நீண்ட பிணி உள்ளோருக்கு இது சோதனை காலமாகும்.

கும்பம்;- ஏமாற்றத்திற்கு இடமுண்டு இன்னல்கள் பின்னிப் பின்னித் தோன்றும். தொழிலில் பகைமை தோன்றும் விவசாயிகள் நிதான புத்தியுடன் நடக்கவும் குடும்ப வாழ்க்கை கோணலாக இருக்கும். சுகக்குறைவும் உண்டு. காதலர் வாழ்வில் பகைமை தோன்றும் கல்வியுல் மந்தநிலை தென்படும்.

மீனம்;- காதலர் வாழ்வில் களிப்பூட்டும் நிகழ்ச்சிகள் இடம் பெறும். கைத்தொழில் புரிவோருக்கு கணிசமான வரவு உண்டு. விவசாயிகளுக்கும் லாபமுண்டு அரசியல் வாதிகளுக்கு உயர்வும் முன்னேற்றமும் உண்டு வாகனச் சொந்தக்காரர்களுக்கு லாபமும், குடும்பஸ்தர்களுக்கு களிப்பான சம்பவமும் ஏற்படவாய்ப்புண்டு

திருமலை
க வே. ரவீந்திரன்

# “ஒழுக்கம், கட்டுப்பாடு சேவை என்பவற்றால் உயர்ந்தார்!”

## செல்வி தங்கம்மாவின் மணிவிழாவில் பாராட்டு

[மாவிட்டபுரம்]

“ஒரு தேசிய இனத்தை அழித்தொழிக்க வேண்டுமானால் அதன் மொழி, மதம், கலை, கலாசாரம், பண்பாடுகளை அழிப்பதன்மூலம் அதனைச் செய்துவிடலாம். இவ்வாறான இன ஒழிப்பு நடவடிக்கைகளை எதிர்த்துநின்று இனத்தைக் காக்கும் பணியில் ஈடுபடுவது எம்மைப் பொறுத்தவரை அவசியமானதொன்றாகும் இந்நிலையில் எமது மதத்தை, மொழியை, கலை, கலாசாரங்களைப் பாதுகாக்க செல்வி தங்கம்மா ஆற்றிவரும் மகத்தான பணியைத் தமிழினம் முழுவதுமே போற்றிப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்”

இவ்வாறு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் இடம்பெற்ற சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குடியின் மணி விழாவில் கலந்து வாழ்த்துரை வழங்கிய முன்னாள் மானிப்பாய் எம். பி.யும், துர்க்காதேவி ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவருமான திரு வி தர்மலிங்கம் கூறினார்.

மணி விழாச் சபைத் தலைவர் திரு. வி என் சிவராஜா தலைமையில் இவ்விழா நடந்தது.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் ‘சிவத்தமிழ் இன்பம்’ என்னும் நூலை வெளியிட்டு வைத்து பாராட்டுரை வழங்குகையில், “ஆசிரியப் பணியில் காலடியெடுத்து வைத்து 3 ஆண்டுகள் கத்தோலிக்க சூழ்நிலையிலும், 11 ஆண்டுகள் இஸ்லாமிய சூழ்நிலையிலும் கடமையாற்றியவர் செல்வி தங்கம்மா அந்தப் புறச்சமய சூழ்நிலைகள்தான் அவரை எமக்குத் தந்தது எனலாம். ஒழுக்கம், கட்டுப்பாடு, சேவையுணர்வு என்பனவற்றால் உயர்ந்த பண்டிதை செல்வி தங்கம்மா சைவத் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெரும் சொத்தாகும்” என்றார்.

முன்னாள் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு தி மாணிக்கவாசகர் நூல் வெளியீட்டு வைபவத்தில் பேசுகையில், “சைவ உலகில் ஒரு புரட்சிகர மாற்றத்தை செல்வி தங்கம்மா ஏற்படுத்தியுள்ளார். ஒரு காலகட்டத்தில் கோவில் என்றால் அது ஒரு சாராருக்கே உரியதெனவும், சமயம் என்றால் அதுவும் ஒரு சாராருக்கே உரியதெனவும் வழக்கத்தில் இருந்தது இதனைமாற்றி சமய வாழ்க்கையுடன் மக்கள் வாழ்க்கையை இணைத்துப் பெரும் பணியாற்றிவருபவர் செல்வி தங்கம்மா” என்றார்.

நல்லை ஞான சம்பந்த ஆதீன முதல்வர் ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தமது ஆசியுரையில், “காரைக் காலம்மையார் மங்கையற்கரசியார் வழியில் இன்று நாம் செல்வி தங்கம்மாவைக் காண்கிறோம். அவரைப் பெற்றதால் நாம் பெரும் பாக்கியசாலிகள் ஆகியுள்ளோம்” என்றார்.

மாவை சந்தன் ஆலய ஆதீன கர்த்தா மகாராஜஸ்ரீ ச. துஷண்முகநாதக் குருக்கள் ஆசியுரை வழங்குகையில் ஆலயங்கள் மக்களின் ஆன்மீகசக்தியை பெருக்கவேண்டியஇடங்களாக விளங்கவேண்டும். ஆன்மீக சத்தி, ஆன்மீக பலம் என்பன மனிதனுக்கு அவசியமானவை. துர்க்காதேவி ஆலயம் இந்த வழியில் சிறப்பான சேவை புரிகிறது. அதற்கு வழி வகுத்தவர் செல்வி தங்கம்மா என்றார்

மறுபும் கீரிமலை நகுலேஸ்வர ஆலய ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள், நயினை பிரமஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள், பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள், சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வாக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி திரு எஸ். சுதிரவேற்பிள்ளை, கலாநிதி அ சண்முகதாஸ், திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்

மணிவிழாஞாபகார்த்தமாக செல்வி. தங்கம்மாவின் பணிகளை எடுத்துக்கூறும் இருநூல்கள் வெளியிடப்பட்டன மணிவிழாச் சபை சார்பில் பாராட்டுப் பத்திரம் ஒன்றும்வாசித்து வழங்கப்பட்டது.

மணி விழாச் சபை செயலாளர் திரு.ச விநாயகரத்தினம் நன்றியுரை கூறினார்.


**லிடோ** சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film -
Action packed)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-30,
சிவாஜி, லக்ஷ்மி
**தியாகம்**
(கலர்)


## யாழ். பல்கலைக்கழகத்தில் 2-ம் வருட கலைப்பீட பரீட்சைகள் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக் கழகத்தில் இம்மாதம் 17-ம் திகதி நடைபெறவிருந்த இரண்டாம் வருட கலைப்பீட பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அறிவித்துள்ளார்.

இம்மாதம் 21-ம் திகதி யாழ் பல்கலைக்கழகம் ஆரம்பித்தபின்னர் இப்பரீட்சைக்கான புதிய திகதிபற்றி அறிவிக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இடம்பெயர்ந்த ஆசிரியர்; இடமாற்றப் பட்டியல் விரைவில் வெளியாகும்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த ஆசிரியர்களின் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான இடமாற்றப் பட்டியல் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் துரித முயற்சியால் உடனடியாக வெளியிடப்பட இருப்பதாகப் பொதுச் செயலாளர் திரு.த மகாசிவம் தெரிவித்தார்

1985 ஜனவரி முதல் இடமாற்றம் கிடைக்கும் எனக் கல்விச் சேவைக்குழுவில் இருந்து சுமார் இருநூற்றைம்பது ஆசிரியர்களுக்கு ஏற்கனவே கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. நேற்று பாடசாலைகள் முதலாந்தவணைக்காக ஆரம்பிக்கும் போது தாம் புதிய பாடசாலைகளில் கடமையேற்கலாம் என ஆசிரியர்கள் எதிர்பார்த்து யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்துக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இதனிடையே யாழ்ப்பாண மாவட்டத்துக்கான இடமாற்றப்பட்டியல் கடந்த வாரம் கல்விச் சேவைக்குழுவினால் இரத்துச் செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு டி. எஸ். கே. வணசிங்க, பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் ஆகிய இருவரும் கல்விச் சேவைக் குழுச் செயலாளர் திரு. எம். எச். எச். ஆரியரத்தின, துணைச் செயலாளர் திரு யு. அபேகுணசேகர, கல்விச் சேவைக்குழு உறுப்பினர்

(4-ம் பக்கம் பார்க்க)


Computer Programming
AND
Data Processing Course
(BASIC LANGUAGE)

9 ஆவது பிரிவு

**வார இறுதி வகுப்புகள்**

ஆரம்பம்: 19-01-85
காலை 9-00 மணி

கட்டணம்: ரூபா 1500/-

வெளிநாடு செல்பவர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்.

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**CANTABIA** INSTITUTE
21, Main Street, JAFFNA.
T' Phone 24201

## மணிவாக்கு

உண்மைக் காதலர்கள் தங்களின்ப சரித்திரத்தை வரைவதில்லை —அனட்டோல் பிரான்ஸ்

# நமது நோக்கு

## விசாரணையா விடுதலையா?

மன்னார் பகுதியில் கத்தோலிக்க குருவானவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி உயர்மட்ட விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பது கொழும்பு கத்தோலிக்க மேற்றிராணிமார் சபையின் தலைவர் அதிவண. மார்க்கஸ் பெர்ணன்டோவின் வேண்டுகோள்.

ஆலயத்துள் ஆயுதங்கள், அது ஆயுதப்படையினரின் தளமென்ற குற்றச்சாட்டுகள் முழுதும் பிழையானவையென மன்னார் ஆயர் மறுத்திருக்கிறார்.

ராணுவ தீவிரத்துக்குட்பட்ட வடபகுதி கொழும்பிலிருந்து வெகு தூரமென்பதை இந்த விசாரணை வேண்டுகோளுக்கும் உண்மை நிலைக்கும் உள்ள தூரம் விளக்குகின்றது.

குரு கொல்லப்பட்டாரென்றால், அதுவும் அவருடைய பூதவுடல் பற்றிய மர்மம் வெளிவரவில்லையென்றால் அது பெரும் பரபரப்புக்கும் பதற்றத்துக்கும் உரிய விடயம்.

ஆனால் இன்று வடபகுதியிலும் பொதுவாக தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்கள் அனைத்திலும் இவ்வித சம்பவங்கள் அனந்தம்; பொதுமக்கள் கொலைக்காளாவது சர்வசாதாரணம். இதற்கெல்லாம் விசாரணை நடத்துவதென்றால் காசநோயால் அவஸ்தைப்படுபவனுக்கு இருமல் குணமடைய கலவை குடிப்பது போலிருக்கும். பயங்கரவாதமும், எதிர்பயங்கரவாதமும் ஒழிக்கப்படுவதற்கு விசாரணைகள் எவ்வாறு உதவும்?

யாழ்ப்பாணம் உதாரணமென்றால், இராணுவத்தின் நடமாட்டம் ஏன் அவசியமென்பது தெரிந்த விடயம்; இதனை வரவழைத்த இளைஞ 'பயங்கரவாதம்' ராணுவத்தினால் ஒழியமாட்டாதென்பதும் தெரியும்.

என்ன தெரியாதென்றால் அமைதியாக அன்றாட வாழ்க்கையில் ஈடுபடும் உரிமை உண்டென்று நம்பி வாழும் மக்களுக்கு தினசரி காலன் எங்கே, எவ்விடத்தே எவ்விதத்தில் முடிவு கட்டுவான் என்பதே

இன்று இங்கு மார்ஷல் (Martial) சட்டம் அமுலில் இல்லை; சாதாரண ஊரடங்கு இரவில் உண்டு பகலில் தத்தம் தொழிலில் ஈடுபடும் அப்பாவி மக்கள் சுட்டுக்கொல்லப்படுவதானால் அரச அறிக்கை பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று கூறும்

இதற்கெல்லாம் விசாரணை சிலவேளைகளில் நடப்பதுமுண்டு. விசாரணைகளும் உயர் மட்டகமிஷன்களும் வெறும் கண் துடைப்பென்று சாதாரண அமைதிகாலத்தில் நம்பும் பொதுமக்களுக்கு இன்றைய அபாயநிலையில மிக அவசியமானது இக்கொடுமைகள் நிறுத்தப்படுவதே!

சர்வதேச பயங்கரவாதத்தை எவ்வாறு ஒழித்துக்கட்டலாமென்று சந்தேகப்படும் அமெரிக்கா எவ்வகையிலும் பொதுமக்களுக்குத் தீங்குவிளைக்காத வழிவகைகளையே கையாள வேண்டுமென்று உறுதிகொண்டுள்ளது

எங்கள் நாகரிகம் இளம் அமெரிக்காவுக்கு எவ்வகையிலும் சளைத்ததா?

தமிழ்மக்கள் உரிமை, விடுதலை வேண்டிநிற்கின்றனர். அந்தவேட்கையை எவ்விதத்திலும்முறியடிக்கமுடியாது. விடுதலை வேறு எவரிடமிருந்து பெறும் பண்டமல்ல. மக்கள் அதற்காக உழைத்து உயிரையே தியாகம் செய்யவேண்டும்.

பயங்கரவாத நடவடிக்கைகளினால்- ஆயுதப் போரினால் அதனைப் பெறலாமென்றோ அல்லது நாம் வாழும் நாட்டைப் பிரித்தேயாகவேண்டுமென்றோ கருதவில்லை. அரசியல் கொலைகளை என்றும் ஆதரிக்கவில்லை.

இளைஞர் சமூகம் அவ்வித நம்பிக்கை கொண்டிருப்பதை அரசு தடுப்பதானால் தமிழ் சமூகம் ராணுவ நடவடிக்கைக்குப் பலியாக வேண்டியது தவிர்க்கமுடியாததா? இந்தவகையில் தமிழ் மக்கள் ஆதரவை எவ்வாறு பெறமுடியும்?

விடுதலைக்கு வழிகாண விசாரணையோ, விசாரணைக்கப்பாற்பட்ட வன்செயலோ வீண்முயற்சி. கண்துடைப்பல்ல, மக்கள் ஏமாறப்போவதில்லை.

### இடம்பெயர்ந்த...

(3ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. க. ஜெயக்குமார் ஆகியோரிடம் தனித்தனியே தொடர்பு கொண்டு நிலைமைகளை விளக்கியதைத் தொடர்ந்து இரத்துச் செய்யப்பட்ட இடமாற்றப் பட்டியலை உடனடியாக அமுல் படுத்துவதற்கு ஒப்புக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. இப்பட்டியல் கல்விச் சேவைக் குழுவினரால் யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்டதெனவும், ஆகவே இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் தமது இடமாற்றக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் திரு. மகாசிவம் தெரிவித்தார்.

## தொழில் நீதிமன்றம் சேதமாக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியிலுள்ள வடபிரதேச தொழில் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதவர்களால் சேதமாக்கப்பட்டது.

### பாலம் தகர்ப்பு...

1-ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி]

மீன் பிடிப்படகில் இருந்தபோதே அந்த இரு இந்திய மீனவர்களும் இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மரணமான மீனவர்களில் ஒருவரின் சடலம் ராமேஸ்வரத்துக்கு கொண்டுவரப் பட்டுள்ளது. மற்றவரின் சடலம் கிடைக்கவில்லையாம்.

அன்றையதினம் இரவு இவர்களுடன் மீன்பிடிக்கச் சென்ற மேலும் பத்துப்பேருக்கும் என்ன நடந்ததென்று தெரியவில்லையாம். (கி)

### வண்ணை தபா...

(1ம் பக்க 3ம் கலத்தொடர்ச்சி)

பூட்டியிருந்த தபால்கந்தோர் கதவை உடைத்து திறந்து, உள்ளே சென்று தொலைபேசியை துண்டித்தபின் இக்கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது

யன்னல்கள் ஊடாக சிலர் துப்பாக்கிகளை காட்டி, ஊழியர்களை பயமுறுத்திக் கொண்டிருந்தபோது, உள்ளே சென்றவர்கள், தபால் அதிபரிடமிருந்து சாவியைப்பறித்து, இரும்புபெட்டியை திறந்து பணத்தை எடுத்துசென்றதாக கூறப்படுகிறது

கொள்ளையடிக்கப்பட்ட பணம்பற்றிய விபரம், இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

### சுண்டுக்குளி...

(1ம்பக்க 4ம் கலத்தொடர்ச்சி)

இத்தபாலகத்திலிருந்து 1800 ரூபா கொள்ளையடிக்கபபட்டதாகத் தெரியவருகிறது

### நால்வருக்கு...

(1ம்பக்க 1ம்கலத்தொடர்ச்சி)

யோசப் ரவீந்திரன் [கரம்பன்] ஆசீர்வாதம் மாணிக்கம் [மணி] நாவலப்பிட்டி ஞானப்பிரகாசம் ஜேசுநாயகம் [ஜேசு] குருநகர், பத்திமா ராஜா ஜயசீலன் குருநகர் என்ற நால்வருக்கு மரணதண்டனை வழங்குகிறோம். ஈ பி. ஆர். எல். எவ். மக்கள் விடுதலைப்படை''

### யுத்தமும்..

(1-ம்பக்க 4ம்கலத்தொடர்ச்சி)

கில் தனிநாடு கேட்கிறார்கள். இது ஜீ ஜீ. பொன்னம்பலத்தின் 50 க்கு 50 கோரிக்கையை விட மோசமாகும். ''சிறுபான்மைமக்களைதுரத்திவிடும்படி நான் கூறவில்லை. அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். விகிதாசாரப்படியே பாதுகாப்பு அளிக்கவேண்டும்.''

''யுத்தம் என்றால் யுத்தமாக இருக்கவேண்டும் பேச்சுவார்த்தையென்றால் பேச்சுவார்த்தையாக இருக்கவேண்டும். இரண்டையும் ஒரேநேரத்தில் செய்கிறவர்கள் அங்கோடையில்இருக்க வேண்டியவர்கள்.''

''நாம் சாவதத்குத் தயாராய் இருக்கவேண்டும். மற்றவர்களை சாகடித்தும் வாழத் தயாராய் இருக்கவேண்டும். 1983 ஜூலை கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்கள் தம்பகுதிகளுக்குச் சென்று நஷ்டஈடும்பெற்று சந்தோஷமாக இருக்கிறார்கள். ஆனால் வடக்குகிழக்கில் பாதிக்கப்பட்டு வெளியேறிய சிங்களவர்கள் அநுராதபுரத்தில் பிச்சை எடுக்கிறார்கள்.

''போர்த்துக்கேயர் காலத்தில் கூடஎமக்கு இப்படி நடக்கவில்லை 1971ல் பயங்கரவாதத்தை அடக்கியதுபோல் செய்திருந்தால் இப்போது வடக்குகிழக்கில் பயங்கரவாதம் இருக்காது பயங்கரவாதிகளைத்தடவிக் கொடுத்துக் கொண்டு இருந்துவிட்டோம். தமிழர்விடுதலைக் கூட்டணியும் பயங்கரவாதமும் பாம்பின் இருவிஷப்பற்களாகும்'' இவ்வாறு சிறில்மத்யூ பேசினார்.

### யாழ். நகரை...

(1ம்பக்க 3ம்கலத் தொடர்ச்சி]

போக்குவரத்து முற்றாகத் தடை ஏற்பட்டுள்ளது.

இக்குண்டு வெடிசத்தத்தைத் தொடர்ந்து, ஆயுதப் படையினர், அப்பகுதிகளில் காணப்பட்டனர் மக்கள்சிதறி நாலாபக்கங்களும் ஓடினார்கள். ஸ்ரான்லி வீதி, ஆனைப்பந்தி சந்தி, எங்கும் ஒரே துப்பாக்கி வெடிச்சத்தமாக இருந்தது, யாழ். நகரில் கடைகள் யாவும் பூட்டப்பட்டன.

வீதியிலுள்ள மக்கள் மட்டுமன்றி, வீட்டுக்குள் இருந்தவர்களும், பெட்டிகள், சாமான்களுடன் ஓடினார்கள்.

சிறும்பியடி ஒழுங்கையில் நடராசா என்பவருக்குச் சொந்தமான மேல்மாடி வீடு, குண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளது.

மேல்மாடி வீட்டு இடிபாடுகளுக்குள் வெள்ளைநிற டெலிக்கா வான்ஒன்று நொருங்கிக் காணப்பட்டது. 40 அடி உயரமான அன்ரனா வளைந்து காணப்படுகிறது.

## இன்றுமுதல் வேலைநிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க சுகாதார தொழிற்சங்க ஊழியர் இன்று காலை 6 மணிமுதல் வேலைநிறுத்தம் செய்கிறார்கள். கடந்த 4ம் திகதி பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்ட சுகாதார ஊழியர் தி. யேசுதாசனைப் பாதுகாப்புப்படை நேற்றுமாலை 5 மணி வரைவிடுதலை செய்யாததால் மேற்கொள்ளப்படும் வேலைநிறுத்தம் அத்தொழிலாளியை விடுதலை செய்யும்வரை நீடிக்கும்என இச்சங்க வடபகுதிச் செயலாளர் திரு இ. நடராஜசுந்தரம் கூறுகின்றார். (ப)

### எம். ஜி. ஆர். பேசுவார்

(சென்னை)

திரு ராமச்சந்திரனால் இன்னும் சில நாட்களில் பேசமுடியும் என்று அவருக்கு சிகிச்சையளிக்கும் டாக்டர் கூறியதாக திரு. நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### ஜோன் அல்வின் துரைரட்ணம்

ஜோன் அல்வின் துரைரட்ணம் [இறைப்பாறிய அதிபர்] காலமானார். இவர் திருமதி ரோஸ் நல்லம்மாவின் அன்புக் கணவரும், சரோஜினி, தயாளசீலன், சாந்தினி, ஞானசீலன், சுகந்தினியின் அன்புத் தகப்பனாரும், ஞானரட்ணம், கிருபைமலர், புவனேந்திரா, எட்வேட், ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் அடக்க ஆராதனை புதன் [9-1-85] காலை 11-00 மணிக்கு நடைபெறும்.

சென்பீற்றர்ஸ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

1290

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம்

(இளைப்பாறிய பிஸ்கால்)

இளைப்பாறிய பிஸ்கால் இராமலிங்கம் காலமானார். அன்னார் கொக்குவில் புதுக்கோவிலடியைப் பிறப்பிடமாக கொண்டவரும், காலஞ்சென்ற குழந்தைவேலு (உரும்பிராய்) சிவகுரு (கரந்தன்) ஆகியோரின் சகோதரரும், பாக்கியத்தின் அன்புத் தமையனாரும், திரவியத்தின் அன்புக் கணவரும், யோகமலர் புஸ்பராணி, திருலோகசுந்தரம், தவமணி, சகுந்தலா, தர்மராசா (நல்லூர் ப நோ. கூ. சங்கம் கொக்குவில் வேதக் கோவிலடி கிளை முகாமையாளர்) காலஞ்சென்ற விமலா, நவகுமார், கிருஷ்ணகுமார் ஆகியோரின் அன்புத்தந்தையும், அனுஷ்சாபனின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக 9-1-1985 புதன்கிழமை காலை 10 மணிக்கு கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

1289

## மரண அறிவித்தல்

### திருமதி கண்மணி சோமசுந்தரம்

நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த திருமதி கண்மணி சோமசுந்தரம் 7-1-85 ல் காலமானார். இவர் காலஞ்சென்ற நாகப்பர் சோமசுந்தரம் [மருந்தாளர்] அவர்களின் அன்பு மனைவியும், திருநாவுக்கரசு [சவூதி அரேபியா] திருஞானசம்பந்தர் [ஜேர்மனி] வேதநாயகி ஆசிரியை [நெடுங்கேணி மகாவித்தியாலயம்] மாணிக்கவசகர் [சவூதி அரேபியா] சிவபாதசுந்தரம் [மலேசியா] ஆகியோரின் அன்புத் தாயாரும், சரோஜினிதேவி. தனலட்சுமி [பெரியதம்பனை] மகேஷ் ஆசிரியர் [நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம] பேரிபிறிற்றி கிரபெல் [புத்தளம்] ஆகியோரின் அன்பு மாமியாரும், நாகநாதர், தங்கம்மா, [முருங்கன்] செல்லம்மா, [வவனியா] ஆகியோரின் சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [09-01-1985] மாலை நெடுந்தீவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்வண்ணம் கேட்டுக் கொள்ளுகிறோம்.

''சோமபதி''
நெடுந்தீவு.

1291

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P O. Box 49, Telegram Tele phone number 22389-24126.